அபி வெனுவென் அபி நிதியம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அபி வெனுவென் அபி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ரணஜயபுர வீடமைப்பு தொகுதியில் வீட்டு தவணைப் பண வருமானம் தொடர்பாக கிடைக்க வேண்டிய தவணைப் பண வருமானம், முற்செலுத்தப்பட்டவைகள், ஆண்டிற்குரிய தவணைப் பண வருமானம் போன்றவற்றுக்காக தனித்தனியாக பேரேட்டுக் கணக்கு பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் சகல கொடுக்கல் வாங்கல்களும் கட்டுப் பாட்டுக் கணக்கின் மூலம் மாத்திரம் சீராக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிலுவைத் தவணைப் பணம், முற்பணமாக கிடைத்த	கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் கிடைக் வேண்டிய வருமானம், முற் பணமாகக் கிடைத்த தவணைப்பணம் மற்றும் ஆண்டிற் குரிய தவணைப் பணம் வருமானத்திற்காக தனித்தனியாக கணக்குகள் பேணிச்செல்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	வருடாந்த வருமானம், நிலுவை வருமானம் மற்றும் முற்பணமாகக் கிடைத்த வருமானம் என்பவற்றை சரியாக இனங்காணக்கூடிய பிரகாரம் கணக்குகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தவணைப்பணம் மற்றும் ஆண்டிற்குரிய வருமானம் போன்றவற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.		
(ஆ) ரணவிரு வீடமைப்புத் திட்டத்தின் வீடமைப்பு செயற்திட்டத்தின் அட்டுறு நிர்வாக செலவினமாக மொத்த செயற்திட்டப் பெறுமதியில் 02 சதவீதம் அதாவது ரூபா 5,533,942 தொகை மீளாய்வாண்டில் மிகைக்கு எதிராக பதிவழிக்கப் பட்டிருந்த போதும் முன்னைய ஆண்டுகளில் வீடமைப்பு செயற்திட்டத்தில் அட்டுறு நிர்வாக செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 12,132,959 தொகையில் எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2023/2024 ஆம் ஆண்டில் வீடமைப்பு செயற்திட்டத்தில் தொடர்ந்தும் அமுல்படுத்தப் படுகின்றமையால் முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் நிர்வாக செலவினங்களை விடுவிப்பதற்கும், நிர்வாக செலவினங்களை வழங்குவதற்கும் முன் செலவின அறிக்கையொன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது டன் ஏதாவது மீதித் தொகைகள் காணப்படுமாயின் அதனை நிதியத்திற்கு பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளபடியான செலவினங்களை சரியாக இனங்கண்ட பின்னர் ஆண்டின் இறுதி வரையில் செலுத்தப்படாதுள்ள செலவினங்கள் அட்டுறு செலவினமாக இனங்காண்பதற்கும், ஏனைய நிகழத்தக்க செலவினங்களுக்காக ஒதுக்கீடுகளும் மேற் கொள்ளுதல் வேண்டும்.

1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 90 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு பெறுமதியில் வெளியிடுகின்ற போது நியமத்தின் பிரகாரம் உரிய விடயங்கள் வெளிப்படுத்த வேண்டியி ருந்த போதிலும் நிலையத்தின் நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்வதன் மூலம் ரூபா 440,982 மீள் மதிப்பீட்டு இலாபம் இனங்காணப்பட்ட போதும் மேற் கூறப்பட்ட கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டின் போது சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுப் பெறுமதிக்குரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதற்கும் நிதிக் கூற்றுக் களில் குறிப்பிடுவதன் மூலம் காண்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 90 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறை வரிச் சட்டம் மற்றும் அதன் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் நிதியத்தால் உழைக்கப்படுகின்ற வருமானம் தொடர்பாக வரி கடப்பாடொன்று காணப்பட்ட போதும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் வரிச் செயற்பாடுகளுக்கு இணங்குகின்ற வகையில் தயாரிக்கப்படாதி ருந்ததுடன்	அப்பிவெனுவென் அப்பி நிதியத்தால் உழைக்கப்படுகின்ற நிதியின் அளவு 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் மூன்றாவது பட்டோலை யில் காண்பிக்கப்படுகின்ற வருமான வரியிலிருந்து விடுவிக்கும் நிதி அளவாக கவனத்திற்கொள்ள முடியாதிருந்தது என உள்நாட்டு	2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதில் திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் வரி அறிக்கை யை சமர்ப்பிப்பதற்கும், வரிச் செயற்பாடுகளுக்கு இணங்குகின்ற வகையில்

நிதியத்தின் முதலீட்டு வட்டி வருமானத்தை மேவுகை செய்யப்பட்ட ரூபா 9,077,055 நிறுத்தி வைத்தல் வரித் தொகை நிதியத்தின் செலவினமாக மிகைக்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.	இறைவரித் திணைக்களம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.	கணக்குகளைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

	விடயம்	தொகை ரூபா	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தொலைத் தொடர்புக் கோபுர வருமானம்	26,778,441	பெற வேண்டிய வருமானத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப் படாதிருந்தமை யால் பெற வேண்டிய வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	எதிர்காலத்தில் பெற வேண்டிய வருமானங்கள் தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல் அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய மீதிகளுக்காக உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	ரணஜயபுர வீடமைப்பின் தவணைப் பண வருமானம்	70,580,963	ரனஜயபுர வீடமைப்பில் தவணைப்பண வருமானமாக வருமானக் கூற்றில் காண்பிக் கப்படுகின்ற ரூபா 70,580,963 பெறுமதியை கணிப்பிடப்பட்ட முறையைக் காண்பிக்கின்ற விரிவான பட்டோலை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை	வீட்டுத் தவணைப் பண வருமானம் கணிப்பிடும் போது முற்படை அங்கத்தவர்களின் பெயர் பதிவேடு தனித்தனியாக பேணிச் செல்லப்படுவதுடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் ஒரு பதிவேடொன்று பேணிச்செல்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதி மற்றும் மீதிகள் குறித்துரைத்த ரீதியில் இனங்காணக் கூடிய வகையில் அதற்கு நேரொத்த பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(இ)	தொலைத் தொடர்புக் கோபுர வருமானம்	166,684,058	நிதியத்தால் தொலைபேசி கம்பனிகளுடன் கைச்சாத்திடப்பட்ட உடன் படிக்கையின் பிரகாரம் வருமானங்கள் இனங்காண வேண்டியிருந்த போதிலும் அந்தக் கம்பனிகளினால் நிதியத்தின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப் படுகின்ற அனுப்புதல்கள் மற்றும் அந்தக் கம்பனி சமர்ப்பிக்கின்ற ஆவணங்களின் அடிப்படையில் தொலைத் தொடர்புக் கோபுர வருமானம் இனங்காணப்பட்டிருந்தது. அதாவது அந்த	இயைத்தளம், உள்நாடு மற்றும் வெளிநாட்டு அழைப்பு வலையமைப்பு சிக்கலான தொலைத் தொடர்பு தரவு அளவுகளில் வருமானத்தை குறித்துரைத்த ரீதியில் காணிப்பிடுவதற்கு முடியாமையின் காரணமாக தொலைத் தொடர்பு கோபுர வருமானங்களுக்கான பட்டியல்	உடன்படிக்கையின் பிரகாரம் கிடைக்க வேண்டிய வருமானங்களை சரியாக கணிப்பிடுகின்றமையை உறுதிப் படுத்துகின்ற திட்ட முறைமையொன்று பின்பற்றப்படல் வேண்டும்.

			வருமானங்கள் சரியாக இருந்தமை உறுதிப்படுத்தும் திட்டமுறைமையொன்று அமுல்படுத்தப்படாதிருந்தமை யினால் நடப்பாண்டில் ரூபா 166,684,058 தொலைத் தொடர்பு கோபுர வருமானம் மற்றும் அட்டுறு கோபுர வருமானம் ரூபா 26,778,441 என்ற பெறுமதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	தயாரிக்க முடியாதிருந்ததுடன் அதற்காக அமைச்சின் தொழில் நுட்ப பிரிவிற்கு அறிவிக்கப்பட்ட போதும் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை.	
(ஈ)	கோபுரங் களின் வருமானம்	164,130,928	இரண்டு தொலைபேசி கம்பனிகளுடன் 10 வருட காலத்தை மேவுகை செய்யும் வகையில் ஏற்படுத்தப்பட்ட புரிந் துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் கோபுரங்களின் மொத்த வருமானத்தில் 50 சதவீதம் நிதியத்திற்கு செலுத்த வேண்டு மென குறிப்பிடப்பட்ட போதிலும் தொலைபேசிக் கம்பனியினால் அவ்வாறு அனுப்பப்பட்டிருந்த ஆவணங்களில் உரிய கோபுரங்களின் மொத்த வருமானம் குறிப்பிடப்படாமையின் காரணமாக உடன்படிக்கையின் பிரகாரம் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய சரியான வருமானம் கிடைத்திருந்ததா என உறுதிப்ப டுத்த முடியாதிருந்தது. அதன் காரணமாக உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 164,130,928 ஆன அந்த கம்பனி இரண்டில் இருந்தும் கிடைத்த வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	புரிந்துணர்வு உடன் படிக்கையின் 4.1.3 பிரிவில் காணப்பிக்கப் படுகின்ற சட்ட ரீதியான விடயங்கள் தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டி உள்ளதனால் அந்த புரிந்துணர்வு உடன் படிக்கை தொழில்நுட்ப பிரிவிற்கு சமர்ப்பித்து மிகுதி ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உடன்படிக்கையின் பிரகாரம் தொலை பேசி கோபுர வருமானங்களை சரியாக கணிப்பிட்டு கணக்கீடு செய்யப் படுகின்றமையை உறுதிப்படுத்துகின் ற திட்ட முறைமையொன்று பின்பற்றப்படல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு ரணஜயபுர வீட்டு உரிமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவைத் தவணைப் பணம் ரூபா 31,359,101 ஆக இருந்ததுடன் அதில் 01 முதல் 05 வருடங்கள் வரையிலான காலத்தில் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 14,802,000 ஆக இருந்ததுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நிலுவையான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 3,648,000 ஆனமை யால் கால ரீதியில்	ரணஜயபுர வீட்டு நலனாளிகளிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவைத் தவணைப் பணத்தை அறவிடல் தொடர்பாக முற்படை களுக்கும் கடிதம் அனுப்பியதன் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் இந்த நிலுவைத் தவணைப் பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஓய்வூதியம் தயாரித்தல் தாமதம், சேவையை	வீட்டு உரிமையாளர் களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவைப் பணம் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	தவணைப் பணத்தை அறவிடுவதில் நலிவான நிலைமை யொன்று காணப்பட்டது.	விட்டுச் சென்றமை, மரணமடைந்தமை போன்றவற்றின் காரணமாக மாதாந்த சம்பளத்தில் தவணைப் பணம் அறவிட முடியாதிருந்தமை மற்றும் நிரந்தரக் குடியிருப்புக்கள் மாற்றமடைந்தமை போன்ற விடயங்கள் நிலுவைப் பணம் உயர்வடைந்து செல்வதற்கு காரணமாக இருந்தது.	
(ஆ)	கோபுர வருமானம் தொடர்பாக தொலை பேசி கம்பனியுடன் இணங்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஏதாவது மாதம் ஒன்றிற்குரிய வாடகை அடுத்துவரும் மாதத்தில் நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட கால தாமதத்துடன் செலுத்தியதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 15,018,841 தொகை நிலுவையாக காணப் பட்டதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணமும் அறிவிடப்பட்டிருக்க வில்லை.	நிலுவை வருமானம் அறவிடுப் பட்டுள்ளதுடன் மேலும் கிடைக்க வேண்டிய ரூபா 5,539,338 நிலுவை வருமானத்தை அறவிடு வதற்காக சகல கம்பனிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் உடன் படிக்கையின் பிரகாரம் உரிய மாதத்தின் இறுதியின் போது கோபுர வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் வருமானத்தை கால ரீதியில் சேகரிப்பதற்கும், தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	ரணஜயபுர சந்தை தொகுதியில் 18 கடை வாடகைக்கு வழங்குவதற்கான உடன்படிக்கையில் 2(அ) பந்தியின் பிரகாரம் மாதாந்த வாடகை ஒவ்வொரு மாதமும் 25 ஆம் திகதி செலுத்தவேண்டியிருந்தமையால் ஆண்டின் இறுதியில் நிலுவை வருமானம் காணப்பட முடியாதிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய கடை வாடகை வருமானமாக ரூபா 750,149 இனங்காணப்பட்டிருந்தது.	ரணஜயபுர சந்தை தொகுதியில் நிலுவை வாடகையுடன் தொடர் புடைய அந்த நிருவாக அலுவவலகத்திற்கு அறிவிக்கப் பட்டுள்ளதுடன் தற்போது அந்த நிலுவைக் கடை வாடகை வருமானம் இந்த நிதியத்திற்கு கிடைத்துக்கொண்டிருக்கின்றது.	உடன்படிக்கையின் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் கடை வாடகை வருமானத்தை சேகரிப் பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுட னான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய சட்டத்தின் 09ஆம் பிரிவு	மேற்கூறப்பட்ட பிரிவில் காண் பிக்கப்படுகின்ற பிரகாரம் நிதியத் தால் "அபி வெனுவென் அபி நிதியம்" என்ற பெயரில் இலங்கை மத்திய வங்கியில் நிதியம் ஒன்று பேணிச்செல்ல வேண்டியிருந்ததுடன் அந்த சட்டத்தின் 07 ஆவது பிரிவின் பிரகாரம் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பணம் அந்தக்	நிதியத்தின் தொலைத் தொடர்பு கோபுர வருமானம் வீட்டு தவணைப் பணம், கடை வாடகை மற்றும் நன்கொடை பணம் போன்றவை சேகரித்தல் வர்த்தக வங்கிகளில் பேணிச் செல்லப்படுகின்ற கணக்குகள் ஊடாக	சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் சட்டத்தின் பிரிவுகளை பிரயோக ரீதியில் அல்லாமல் சந்தர்ப்பம் காணப் படுகின்ற பொருத்தமான திருத்தப்பட்ட சட்ட

		கணக்கில் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் நிதியத்தால் இலங்கை மத்திய மத்திய வங்கியில் கணக்கொன்று பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை.	மேற்கொள்ளப்படுகின்ற மையால் இலங்கை மத்திய வங்கியில் புதிய கணக்கொன்று திறப்பது நடைமுறையில் பிரச்சினைகள் அநேக மானவற்றுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்படும்.	ரீதியான விடயங்களில் மேற் கொள்ளல் வேண்டும்.
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1)(இ)	எதிர்வரும் ஆண்டில் பாதீட்டு நிதி ஏற்பாட்டின் நோக்கங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு கட்டுப் பாட்டுச் சபையின் அங்கீகாரத் துடன் நடப்பாண்டின் செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் பொதுத்திறைசேரியின் அங்கீகாரத்திற்காக தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் பாதீடு சமர்ப்பித்தல் 2023 நவம்பர் 27 ஆம் திகதி வரை தாமதிக்கப்பட்டிருந்ததுடன் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டில் பாதீடு 2023.09.26 ஆம் திகதி சனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் 2023.11.24 ஆந் திகதிய அங்கீகாரத்துடன் பொதுத்திறைசேரிக்கு சமர்ப்பிக்க பட்டுள்ளதுடன் 2023.05.30 முதல் 2024.12.16 ஆம் திகதி வரை முகாமைத்துவ சபைக் கூட்டம் நடைபெறாமையின் காரணமாக அங்கீகாரத்துடன் திறைசேரிக்கு சமர்ப்பிக்க முடியாதிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் பாதீடு 2024.12.17 ஆந் திகதிக முகாமைத்துவ சபை அங்கீகரித் திருந்தது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டின் பாதீடு நடப்பாண்டின் செப்டெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப் பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவன் அபி நிதிய சட்டத்தின் 11(1), (2) மற்றும் (4) ஆம் பிரிவுகள்	மேற்கூறப்பட்ட பிரிவுகளின் பிரகாரம் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து கட்டுப் பாட்டுச் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் 11(4) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் முன்மொழிவுகளை அங்கீகரித்த லின் மூலம் நிதிக் கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் நிருவாக சபையின் கூட்ட முன்மொழிவுகள் அங்கீகரிப்ப தன் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் தலைவரை உள்ளடக்கிய நிருவாக சபை அங்கத்தவர்களின் கையொப்பத்துடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள துடன் எதிர்காலத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட 33 ஆவது முகாமைத்துவ சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பித்து 2024 இன் நிதிக்கூற்றுக்களுக்காக	சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிருவாக சபையின் முன்மொழிவுகளை அங்கீகரிப்பதன் மூலம் நிதிக்கூற்றுக்களை அங்கீகரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.

			மேவுகை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஈ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(இ) குறிப்பிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 04 இன் 6 (ஆ) பந்தி	நிதிக்கூற்றுக்கள் மும்மொழிகளிலும் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் சிங்கள மொழியில் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்பிற்காக அனுப்பப் பட்டுள்ளமையால் எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிமாணத்தின் பிரகாரம் மும் மொழிகளிலும் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.8 நிதி முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதியத்தால் பொது மக்களின் நன்கொடைகளைச் சேகரிப்பதற்காக பேணிச் செல்லப் படுகின்ற மூன்று நடைமுறைக் கணக்குகளில் 2018 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலத்தில் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 1,141,318 தொகையான நிதி காணப்பட்டது. இந்த கணக்குகள் தொடர்புடைய ஆண்டில் அல்லது முன்னைய ஆண்டுகளின் போது எந்த வொரு கொடுப்பனவும் மேற்கொள்ளப்படா மையால் ஆகக் குறைந்த வைப்பைப் பேணிச்சென்று மிகை பணத்தை ஆக்க பூர்வமாக முதலீட்டில் ஈடுபடுத்துவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த கணக்கு செயற்பாடுகளுக் காக அதிகாரம் வழங்கப்பட் டுள்ள உத்தியோகத்தர்கள் தற்போது நிதியத்தின் கடமை களை மேற்கொள்ளாதிருந்தமை யால் புதிய உத்தியோகத்தர் களின் பெயர் முன்மொழியப்பட்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன் அதன் பின்னர் ஆக்கபூர்வமான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மிகைப் பணத்தை ஆக்க பூர்வமாக முதலீடு செய்வதற்கான சாத்தியமான வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	நிதியத்தால் பேணிச் செல்லப்படுகின்ற நிதிய முகாமைத்துவ சேமிப்பு கணக்கின் மிகையாக காசு மீதி பேணிச்செல்லப்படு கின்றமை அவதானிக்கப்பட்டதுடன் 2024 இன் முதல் அரையாண்டில் ரூபா 06 மில்லியன் முதல் ரூபா 13 மில்லியன் வரையிலான வீச்சில் மீதியும், இரண்டாவது அரையாண்டில் ரூபா 12 மில்லியன் முதல் ரூபா 37 வல்லியன் வரையான வீச்சில் மீதியும் பேணிச் செல்லப்பட்டிருந்தது. இதற்காக ஆகக்	அந்தந்த சந்தர்ப்பங்களின் போது செலுத்துவதற்கு தேவையான அளவான தொகை மாத்திரம் கணக்குகளில் பேணிச் செல்லப் படுவதுடன் தொழிற்படும் மூலதனத் தேவைக்காக ஏதாவது நிதியொன்றை நிறுத்தி வைத்துக் கொள்ளல் எந்தவொரு வியாபாரம் / அமைப்புகளுக்கு தேவையாக இருந்ததுடன் எதிர்வு கூற முடியாத நிலைமையில்	திட்டமிடப்பட்ட காலப் பகுதியில் உரிய செலவினங்களைச் செய்வதற்கும் மிகை நிதியத்தை மிகவும் நலன்வாய்ந்ததாக முதலீடு செய்வதற்கும் இயலுமான வகையில் முறையான நிதிய முகாமைத்துவம் ஒன்று பேணிச்செல்லப்படல் வேண்டும்.

குறைந்த வட்டி விகிதத்தின் அடிப்படையில் வட்டி கிடைத்திருந்த போதும் மிகைப் பணத்தை குறுகிய கால முதலீட்டில் ஈடுபடுத்தி வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்படக்கூடிய நிச்சயமற்ற நிலைமையின் காரணமாக நிதி மிகை / பற்றாக்குறை ஏற்பட முடியும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 119,816,332 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 75,144,999 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 44,671,333 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்காக வீட்டு உதவிப் பணம் செலுத்துதல் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 142,728,695 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது. முதலீட்டின் அடிப்படையில் வட்டி வருமானம் ரூபா 95,118,015 இனால் குறைவடைந்ததன் காரணமாக உயர்ந்த மிகையொன்றை அறிக்கையிடுவதற்கு முடியாதிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 300 அரைவாசி வீடுகள் மற்றும் 20 முழுமையான வீடுகளுக்காக ரூபா 340,000,000 உதவிப் பணம் செலுத்தி முடிவுறுத்துவதற்கு திட்டமிப்பட்டிருந்த போதும் 2024 திசம்பர் 31 ஆம் திகதியில் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 108,303,531 மற்றும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 9,050,456 மேலும் செலுத்த வேண்டியிருந்தது.	2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் அடிப்படையில் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமையால் கோவைகளில் குறைபாடுகள், புலனாய்வுப் பிரிவின் இரகசிய அறிக்கை தாமதம் உள்ளடங்கலாக நிருவாக ரீதியான பிரச்சினைகளின் காரணமாக 2024 ஆம் ஆண்டில் வீடமைப்பு செயற்திட்டத்திற்காக திட்டமிடப் பட்ட பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு வசதியற்று இருந்ததுடன் நிர்மாண நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அந்தந்த ஆண்டில் திட்டமிடப்பட்ட எதிர்பார்த்த இலக்குகளை நிறைவேற்றுதல் வேண்டும்.
(ஆ)	ரனஜயபுர வீடமைப்புத் தொகுதியின் வீடுகளுக்காக 131 அங்கத்தவர்கள் தவணைப் பணம் செலுத்தி பூர்த்தி செய்வததாக அறிக்கையில் காணப்பட்ட துடன் இரு தரப்பினர்களால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 02 ஆவது பிரிவின் பிரகாரம் தவணைப் பணம் செலுத்தி பூர்த்தி செய்த நபர்களுக்கு வீடுகளின் உரித்தைக் கையளிக்கும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு	பாதுகாப்பு அமைச்சின் நேரடி பங்களிப்பில் தற்போது இப்பலோகம பிரதேச செயலகம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் மற்றும் காணி அமைச்சு போன்ற அரசாங்க நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி ரணஜயபுர வீட்டு நலனாளிகளுக்காக உரித்துறுதி சான்றிதழ் வழங்கும் செயற்பாடுகளை துரிதமாக	தவணைப் பணம் செலுத்தி பூர்த்தி செய்தவர்களுக்கு உடன்படிக்கையின் பிரகாரம் வீட்டின் உரித்தை கையளிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	மீளாய்வாண்டின் போதும் தவறியிருந்தது.	மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	
(இ)	வீட்டு உதவி கையளிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட நபர்கள் குறித்துரைத்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமைக்கும் மற்றும் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானதும் உண்மையானதும் எனவும் உறுதிப்படுத்துகின்ற பிரகாரம் ஒவ்வொரு நபருக்காகவும் ஆவணங்கள் பேணிச்செல்ல வேண்டியிருந்த போதிலும் நிதியத்தால் பேணிச்செல்லப்பட்டிருந்த கோவையில் அந்த தேவைகள் பூர்த்தி செய்கின்ற பிரகாரம் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் கோவையில் உறுதிப்படுத்தப்படாத நிழற் படப்பிரதி காணப்பட்டமை, உரிய பரிந்துரையின்றி விண்ணப்பங்கள் காணப்பட்ட பின் மற்றும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமை போன்ற குறைபாடுகளுடன் காணப்பட்டது.	நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப் படுகின்ற வீடமைப்பு செயற்திட் டத்திற்காக நலனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் ரணவிரு சேவா மற்றும் புனருத்தாபன பணிப்பாளர் மற்றும் சபை மற்றும் ஏனைய நலன்புரி பிரிவுகளால் மேற் கொள்ளப்படுவதுடன் தெரிவு செய்யப்பட்ட படை வீரர்களின் கோவைகள் நிதியத்திற்கு சமர்ப்பித்து நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	தெரிவு செய்யப்பட்ட நபர்கள் குறித்துரைத்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மைக்கும், வழங்கப்பட் டுள்ள சகல தகவல் களும் சரியானதும் உண்மையானதும் என உறுதிப்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	நியதியத்தல் அமுல்படுத்தப்படுகின்ற வீட்டு உதவி செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நலனாளிகளுக்கு நிதியத்தால் நேரடியாக நலன்கள் செலுத்தும் திட்ட முறைமையொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளுக்கும் மற்றும் மீளாய்வாண்டிற்கும் உரியதாக ரூபா 283.22 மில்லியன் மீளாய்வாண்டின் போது முப்படையினதும், பொலீஸினதும் வைப்பு கணக்கிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும் வீட்டு உதவி பெறுகின்ற நபர்களுக்கு நலன்கள் காசாக கிடைக்கின்றமை, வெளித்தரப்பினர் ஊடாக பெறப்படுகின்ற கடிதம் மூலம் மாத்திரம் உறுதிப்படுத்துதல் மற்றும் அதற்காக கவனத்திற்கொள்ளக்கூடிய காலதாமதம் எற்படுகின்றமை மற்றும் அவ்வாறே பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட கையொப்பம் மற்றும் ஏனைய தகவல்கள் சரியாக இருந்தமையை திருப்திகரமாக அவதானிக்க முடியாத நிலைமை காணப்பட்டது.	நலனாளிகளினால் வழங்கப்பட்ட தகவல்களில் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு பத்திரம் கிராம சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலாளர், உரிய படையின் அலகு கட்டளை அதிகாரி, நலன் புரிப் பணிப்பாளர் மற்றும் இந்த அமைச்சின் மூலம் நியமிக்கப்பட் டுள்ள இணைப்பு உத்தியோகத் தர்களின் பரிந்துரையின் பின்னர் இந்த அமைச்சிற்கு சமர்ப்பிக்கப் படுகின்றதுடன் அரைவீட்டு செயற்திட்ட நலனாளிகளுக்கு கட்டம் கட்டமாக பணத்தை விடுவிக்கும் போது உரிய பணம் நலனாளிகளுக்கு கிடைத்தமை நளனாளிகளின் கையொப்பத்துடன் நிதி கிடைத்த மையை உறுதிப்படுத்தும் கடிதம் இணைப்பு உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் இந்த நிதியத்திற்கு வழங்கப்படுகின்றது.	நலனாளிகளுக்கு நிதியத்தால் நேரடியாக நலன்களை செலுத்தும் முறைமையொன்றும், நலன்கள் சரியாக கிடைத்தமையை உறுதிப்படுத்துகின்ற திட்டம் முறைமை யொன்றும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பாதுகாப்பு இராணுவ முகாம்கள் அமைந்துள்ள காணிகளில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 49 தொலைத் தொடர்பு கோபுரங்களுடன் சார்ந்த மின்சார சமிஞ்சைகள் உட்கட்டமைப்பு வசதிகள் அமுல்படுத்தப்பட்டு முகாமைத்துவம் செய்வதற்காக நிதியத்தால் 03 வெளி தொலைபேசி கம்பனிகளுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 166.68 மில்லியன் வருமானம் நிதியத்திற்கு கிடைத்திருந்தது. எனினும் தனியார் தொலைபேசி கம்பனிகளுடன் உடன்படிக்கை செய்வதற்கும், அதன் மூலம் உருவாகின்ற வருமானம் நிதியத்தின் வருமானமாக கவனத்திற்கொள்வதற்காக அதிகாரம் கையளித்தல் குறித்துரைத்த அதிகார தரப்பினர் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	தொலைத்தொடர்பு கோபுர கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் பிரிவுகளின் பிரகாரம் 2008 இன் 06 ஆம் இலக்க ‘‘அபி வெனுவென் அபி நிதியம்’’ இற்கு நிதி செலுத்த வேண்டியிருந்தமை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அபி வெனுவென் அபி நிதியத்தின் 7(ஊ) பிரிவின் பிரகாரம் ஏனைய பெறுவனவுகளின் கீழ் அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்தது.	தொலைபேசிக் கம்பனி யுடன் உடன்படிக்கை செய்வதற்கும் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்க வேண்டிய வருமானங்களை நிதியத்தின் வருமானமாக கவனத்திற் கொள்வதற்கான குறித்துரைத்த அதிகாரப் பலம் தொடர்பாக வெளிப்படுத்துதல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய சட்டத்தின் 11(6) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் நிதியத்தின் ஆரம்பத்தில் இருந்து 2023 ஆம் ஆண்டு வரையான அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய சட்டத்தின் 11(6) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உரிய ஆவணங்கள் தற்போது தயாரிக்கப்படுகின்றது.	2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய சட்டத்தின் 11(6) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.